சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | ராஜீவ் காந்தி |
| தந்தை பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 38 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை,

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர் ஆவேன். அ.சா-1 கஜேந்திரன் என்பவரை

தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 01.06.2025 ஆம் தேதி பைங்காநாடு கிராமம், மெயின் ரோட்டில் உள்ள மது கடையில் மாலை சுமார் 7.30 மணியளவில் அ.சா-1 கஜேந்திரன் சைக்கிளில் வந்தவரை எதிரி பறையன் என்றால் பெரிய ஆளா என்று சொல்லி உதைத்து தள்ளிவிட்டார். அ.சா-1 க்கு இடுப்பில் அடிபட்டுவிட்டது. அதன் பின்னர் அவரை அவரது அண்ணன் கட்டாப்பு மற்றும் மணிகண்டன் என்பவரும் அழைத்து சென்று மருத்துவமனையில் சேர்ந்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அதன் பின்னர் 04.06.2025 ஆம் தேதி மன்னார்குடி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.12.16 18:28:14 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.